14698

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

ව්‍යාපාර අධ්‍යයනය I
வணிகக் கல்வி I
Business Studies I

**32 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.
* **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

**சுட்டெண் :** ...............................

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| வினாத்தாள் I | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

| | கையொப்பம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| 1 வது பரீட்சகர் | | |
| 2 வது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |

**1.** பின்வருவனவற்றுள் வணிகமொன்றின் முக்கிய நோக்கமாகக் கருதப்பட **முடியாதது** எது?
(1) இலாபத்தை உச்சப்படுத்தல் (2) சந்தைப்பங்கினை அதிகரித்தல்
(3) வேலைவாய்ப்புகளை உச்சப்படுத்தல் (4) சந்தையில் நிலைத்திருத்தல்
(5) விற்பனையை உச்சப்படுத்தல் (.........)

**2.** பல்வேறு தரப்பினரும் வணிகத்தின் மீது அக்கறை கொள்வதற்கு ஏதுவான காரணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - இலாபம் B - வணிகத்தின் வளர்ச்சி
C - சந்தைப்பங்கு D - எடுத்த தீர்மானங்களின் வெற்றிகரத்தன்மை
E - சம்பளம் F - தொழிலின் நிலையான தன்மை
G - பதவி உயர்வு H - தொழில் அபிவிருத்தி

மேலுள்ளவற்றுள் வணிகத்தின் மீது முகாமையாளர்கள் மட்டும் அக்கறை கொள்வதற்கான காரணங்களை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) A, B, D, H (2) A, C, D, H (3) A, D, E, H (4) B, D, F, H (5) D, E, F, G (.........)

**3.** பின்வருவன வணிகத்தின் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய சில சூழல் சக்திகளாகும்.
A - வாடிக்கையாளர்கள் B - சமூக கலாசாரக் காரணிகள்
C - போட்டியாளர்கள் D - வழங்குநர்கள்
E - பதிலீட்டுப் பொருள் உற்பத்தியாளர்கள் F - தொழினுட்பக் காரணிகள்

மேலுள்ளவற்றுள் அண்மைய சூழல் சக்திகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) A, B, C, D (2) A, C, D, E (3) A, C, D, F (4) B, C, D, E (5) B, C, D, F (.........)

**4.** வணிகமொன்றினால் பல்வேறு பிரிவினர் தொடர்பில் நிறைவேற்றப்பட வேண்டிய சமூகப் பொறுப்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - நியாயத்தன்மை B - சமமாக நடத்தும் தன்மை
C - வரி செலுத்துதல் D - முதலீட்டிற்கு நியாயமான வருமானம்
E - தொழிலில் பாதுகாப்பு F - தொழில் வாய்ப்புகளை வழங்கல்
G - வினைதிறனானதும் நேர்மையானதுமான முகாமைத்துவம் H - சமூக நலனோம்புச் சேவைகள்
I - கழிவுப்பொருள் முகாமைத்துவம் J - சுகாதார, பாதுகாப்பு வசதிகள்

மேலுள்ளவற்றுள் வணிகமொன்றினால் சமூகத்திற்கு மட்டும் ஆற்ற வேண்டிய சமூகப் பொறுப்புக்களை உள்ளடக்கிய தொகுதியினைத் தெரிவுசெய்க.
(1) A, B, E, J (2) A, B, H, J (3) B, C, F, I (4) C, D, G, I (5) C, F, H, I (.........)

[பக். 2 ஐப் பார்க்க

**5.** பின்வரும் அட்டவணையில் **X** நிரலில் வணிகம் மற்றும் அரசுடன் தொடர்புடைய சில செயற்பாடுகளும் **Y** நிரலில் இச் செயற்பாடுகளின் விளைவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A - அரசு வணிகங்களின் மீது செல்வாக்குச் செலுத்துவது | 1. பொருளாதாரத்தின் பணவழங்கலில் ஆகும். |
| B - அரசின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு வணிகங்கள் உதவுவது | 2. ஒரு போட்டியாளராவதன் மூலமாகும். |
| C - அரசின் இறைக்கொள்கைகள் வணிகத்தின் மீது செல்வாக்குச் செலுத்துவது | 3. உள்நாட்டு மூலப்பொருட்களை பயன்படுத்துவதனால் ஆகும். |
| D - அரசின் பணக்கொள்கைகள் செல்வாக்கு செலுத்துவது | 4. பொருட்களின் விற்பனை அதிகரிப்பதன் மூலம் இலாபம் அதிகரிப்பதனால் ஆகும். |
| E - வியாபாரிளுக்கு வாடிக்கையாளர் பாதுகாப்பு முக்கியமாக அமைவது | 5. உற்பத்திகளின் மீது பல்வேறு வரிகளை விதிப்பதன் ஊடாக பொருட்களின் விலையை உயர்வடையச் செய்வதன் மூலம் ஆகும். |

X, Y நிரல்களின் பொருத்தமான இணைப்பைத் தெரிவுசெய்க.

(1) A-5, B-2, C-4, D-1, E-3
(2) A-5, B-3, C-2, D-1, E-4
(3) A-2, B-3, C-5, D-4, E-1
(4) A-2, B-3, C-5, D-1, E-4
(5) A-3, B-2, C-5, D-4, E-1 (.........)

**6.** பின்வருவன பல்வேறு வணிகங்களின் நன்மைகள் சிலவாகும்.

A - இலகுவில் ஆரம்பிக்க முடிதல்
B - பெரியளவு மூலதனத்தைத் திரட்டிக் கொள்ள முடிதல்
C - தீர்மானம் எடுத்தலில் சுயாதீனம் காணப்படல்
D - வணிகத்தை முகாமை செய்வதற்கு திறமையானவர்களை நியமித்துக்கொள்ள முடிதல்
E - வணிகத்தைக் கலைப்பது இலகுவாயிருத்தல்
F - பொறுப்புக்களைக் கூடிய எண்ணிக்கையானோரிடையே பகிர்ந்துகொள்ள முடிதல்

இவற்றுள் தனியுரிமை வணிகமொன்றின் நன்மைகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, C, E (2) A, E, F (3) B, D, E (4) B, D, F (5) C, D, E (.........)

**7.** பின்வருவனவற்றிலிருந்து அங்கீகாரம் வழங்குபவரிடமிருந்து அங்கீகாரம் பெறுபவர் பெற்றுக் கொள்ள **முடியாத** வசதியினைத் தெரிவுசெய்க.

(1) தனது வியாபாரப் பெயரைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கல்
(2) சந்தைப்படுத்தலுக்கான உதவிகளை வழங்கல்
(3) நிதி வசதிகளை வழங்கல்
(4) தொழினுட்ப வசதிகளை வழங்கல்
(5) எந்தவொரு வழங்குநரிடமிருந்தும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கல் (.........)

**8.** A - தமது திறமைகளை உச்சமட்டத்தில் பயன்படுத்துவதற்கான விருப்பம்
B - சமூகத்தில் காணப்படும் ஏதேனுமொரு பிரச்சினையைத் தீர்ப்பதில் பங்கேற்பதற்கான விருப்பம்
C - தொழில்களினூடாகப் பெற்றுக்கொண்ட அனுபவம்
D - நிரந்தரமான வருமானம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான விருப்பம்
E - குறித்த ஒரு துறை தொடர்பாகப் பெற்றுள்ள கல்வியும் பயிற்சியும்
F - இடர்களைக் குறைத்துக் கொள்வதற்கான விருப்பம்

மேலுள்ளவற்றிலிருந்து முயற்சியாளர் ஒருவர் உருவாகுவதற்கு ஏதுவாகக் கூடிய காரணிகளை உள்ளடக்கிய சேர்மானத்தினைத் தெரிவுசெய்க.

(1) A, B, C, D (2) A, B, C, E (3) A, B, D, E (4) B, C, E, F (5) C, D, E, F (.........)

**9.** A - சட்டப்பணம்
B - வங்கிப் பணம்
C - கறுப்புப் பணம்
D - அண்மியப்பணம்
E - இலத்திரனியல் பணம்
F - கடன் பணம்

மேற்குறிப்பிடப்பட்டவற்றுள் இலங்கையில் பயன்படுத்தப்படும் பண வகைகளை மட்டும் கொண்ட தொகுதியினைத் தெரிவுசெய்க.

(1) A, B, C மற்றும் D
(2) A, B, D மற்றும் E
(3) A, B, D மற்றும் F
(4) B, C, D மற்றும் E
(5) C, D, E மற்றும் F (.........)

**10.** பின்வரும் அட்டவணையில் **X** மற்றும் **Y** நிரல்கள் காசோலை கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய சில தகவல்களைக் காட்டுகின்றன.

| X | Y |
|---|---|
| A. வகைகள் | 1. பிறப்பிப்பவர், கட்டளையைப் பெறுபவர், பணம் பெறுபவர் |
| B. சம்பந்தப்படுவோர் | 2. பொதுமுறை, சிறப்புமுறை |
| C. குறுக்குக் கோடிடல் | 3. காவி, கட்டளை |

X, Y நிரல்களின் பொருத்தமான இணைப்பைத் தெரிவுசெய்க.

(1) A-1, B-3, C-2
(2) A-3, B-2, C-1
(3) A-2, B-1, C-3
(4) A-3, B-1, C-2
(5) A-1, B-2, C-3 (.........)

[பக். 3 ஐப் பார்க்க

**11.** பின்வருவனவற்றுள் ஒப்பந்த சேமிப்பு நிறுவனம் **அல்லாதது** எது ?
(1) அரச சேவை சேமலாப நிதியம் (2) ஊழியர் சேமலாப நிதியம்
(3) சிறப்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள் (4) காப்புறுதிக் கம்பனிகள்
(5) ஊழியர் நம்பிக்கை நிதியம் (.........)

**12.** குமரன் தனது காரை ரூபா 3 மில்லியனுக்கு காப்புறுதி செய்துள்ளார். அவரது கார் அடையாளம் தெரியாத நபரொருவரால் திருடப்பட்டது. காப்புறுதி நிறுவனம் ரூபா 3 மில்லியனை குமரனுக்கு நட்டஈடாகச் செலுத்தியது. சில நாட்களின் பின்னர், காப்புறுதி நிறுவனத்தால் கார் கண்டுபிடிக்கப்பட்டதுடன் அது ரூபா 3.5 மில்லியன் சந்தைப் பெறுமதிற்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது. (ஏல விற்பனைக் கட்டணம் ரூபா 150 000) அதன் பின்னர் காப்புறுதி நிறுவனம் செய்ய வேண்டியது,
(1) ரூபா 3 மில்லியனை வைத்துக்கொண்டு மிகுதித் தொகையை குமரனுக்கு வழங்குதல்.
(2) ரூபா 3 மில்லியனையும் பிற செலவுகளையும் வைத்துக் கொண்டு மிகுதித் தொகையை குமரனுக்கு வழங்குதல்.
(3) ஏல விற்பனைக் கட்டணத்தைச் செலுத்திய பின்னரான மிகுதித் தொகையை வைத்துக் கொள்ளல்.
(4) மோட்டார் வாகனத்தைக் கொள்வனவு செய்பவருக்கு மிகுதித் தொகையை வழங்குதல்.
(5) மிகுதித் தொகையை அரசுக்குச் செலுத்துதல். (.........)

**13.** கொழும்பு துறைமுகத்திலிருந்து சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கு எரிபொருளைக் கொண்டு செல்லவதற்கு **மிகப்** பொருத்தமான போக்குவரத்து ஊடகங்கள்,
(1) டிரக் வண்டிகள், சுரங்கப்பாதைகள் மற்றும் புகையிரதம் ஆகும்.
(2) கப்பல்கள், புகையிரதம் மற்றும் டிரக் வண்டிகள் ஆகும்.
(3) புகையிரதம், கப்பல்கள் மற்றும் சிறிய ஆகாய விமானங்கள் ஆகும்.
(4) குழாய் வழி, புகையிரதம் மற்றும் பௌசர்கள் ஆகும்.
(5) குழாய் வழி, பௌசர்கள் மற்றும் சிறிய ஆகாய விமானங்கள் ஆகும். (.........)

**14.** பின்வருவனவற்றுள் வணிக உலகமயமாக்கலில் முக்கியமான காரணியாக அமைவது எது ?
(1) ஐரோப்பிய ஒன்றியம் (2) தொழினுட்பம்
(3) NAFTA வர்த்தக ஒப்பந்தம் (4) நாடுகளில் இனப் பல்லினத் தன்மை அதிகரித்தல்
(5) மேம்படுத்தப்பட்ட அரசியல் உறுதித்தன்மை (.........)

**15.** பின்வருவனவற்றுள் சார்க் (SAARC) அமைப்பின் உறுப்பு நாடுகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதி எது ?
(1) ஆஸ்திரியா, பெல்ஜியம், நேபாளம், இலங்கை மற்றும் லித்துவேனியா
(2) நெதர்லாந்து, போர்த்துக்கல், பூட்டான், இலங்கை மற்றும் இந்தியா
(3) ஐக்கிய ராஜ்ஜியம், ருமேனியா, ஆப்கானிஸ்தான், இலங்கை மற்றும் பாகிஸ்தான்
(4) இந்தியா, இலங்கை, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் பங்களாதேசம்
(5) கிரேக்கம், பிரான்ஸ், அயர்லாந்து, இத்தாலி மற்றும் பூட்டான் (.........)

**16.** அதிகாரம் வழங்கப்படுவதன் மூலம் **ஏற்படாத** விளைவு குறிப்பிடப்பட்டுள்ள கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) நெருங்கிய தலைவரின் வேலையின் அளவு குறைதல்.
(2) நெருங்கிய தலைவரின் பயிற்சியும் அபிவிருத்தியும் அதிகரித்தல்.
(3) கீழ்மட்ட ஊழியர்களின் வேலையின் அளவு குறைதல்.
(4) ஊக்கமுடைய ஊழியர்கள் உருவாதல்.
(5) தொழில் அபிவிருத்திக்குக் கீழ்மட்ட ஊழியர்களைத் தயார்படுத்தல். (.........)

**17.** திட்டமிடலின்போது எவ்விடயங்களைக் கருத்திற் கொள்ளல் வேண்டும் எனும் வினாவிற்கு சில மாணவர்கள் வழங்கிய பதில்கள் பின்வருமாறாகும்.
A - நடைமுறைத் தன்மை B - வளைந்து கொடுக்கும் தன்மை
C - சந்தர்ப்பத்திற்கு ஏற்ற திட்டமிடல் D - குறிப்பிட்ட கால இடைவெளியைக் கொண்டிருத்தல்
E - வளங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மை
மேலே குறிப்பிடப்பட்டவற்றுள் திட்டமிடலின் போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்
(1) A மட்டும். (2) A யும் B யும் மட்டும்.
(3) A யும் B யும் C யும் மட்டும். (4) A யும் B யும் C யும் D யும் மட்டும்.
(5) மேலே குறிப்பிட்டுள்ளவை அனைத்தும். (.........)

**18.** பின்வருவோருள் முகாமைத்துவத் திறன்களை அறிமுகப்படுத்தியவர் யார் ?
(1) அடம் ஸ்மித் (2) ஹென்றி போர்டு (3) ஹென்றி மின்ஸ்பேர்க்
(4) ரொபட் எல். காட்ஸ் (5) எப். டப்ள்யூ. டெயிலர் (.........)

**19.** பின்வருவனவற்றுள் உற்பத்திச் செயன்முறையின் தீர்மானங்களில் பாதிப்புச் **செலுத்தாத** காரணி
(1) ஊழியர்களின் பயிற்சியும் பயிற்சியற்ற தன்மையும்
(2) தேவையான உபகரணங்களின் வகைகள்
(3) உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களின் வகைகள்
(4) நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை
(5) பயன்படுத்தப்பட வேண்டியேற்படுகின்ற செயற்பாட்டு இட அமைவுத் திட்டங்களின் வகைகள் (.........)

[பக். 4 ஐப் பார்க்க

**20.** கணினி உதவியுடனான வடிவமைப்பினால் (CAD) ஏற்படும் ஒரு நன்மை **அல்லாதது** எது ?
(1) வீண்விரயங்கள் குறைதல்
(2) பூச்சிய வழுவுடைய உற்பத்திப் பொருட்கள் உருவாக்கப்படல்
(3) உற்பத்தி விரைவுபடுத்தப்படல்
(4) தொழில் வழங்குனர்–தொழிலாளர் தொடர்பு விருத்தியடைதல்
(5) விளைதிறன் அதிகரித்தல் (………)

**21.** பின்வருவனவற்றுள் வர்த்தக விளம்பரமொன்றின் பயனுறுதித் தன்மையை அறிந்து கொள்வதற்கு விற்பனை முகாமையாளரொருவருக்கு மிக முக்கியமானதாக அமையும் தகவல் மூலதாரம் எது ?
(1) விற்பனைத் தரவு
(2) சந்தைப்படுத்தல் வலையமைப்பு
(3) சந்தை ஆய்வு
(4) உள்ளக தரவுத்தளம் (Internal database)
(5) போட்டியாளர்களின் பின்னூட்டல் (………)

**22.** பின்வருவனவற்றுள் நீண்டகால நிதியீட்ட மூலம் எது ?
(1) வர்த்தகக் கடன்
(2) வங்கி மேலதிகப்பற்று
(3) பங்கு வழங்கல்
(4) சென்மதிகளைத் தாமதித்தல்
(5) ஊழியர்களை ஊக்குவிப்பதற்கான பங்கு வழங்கல் (………)

**23.** நிறுவனமொன்றின் நிதி முகாமைத்துவத்தின் முக்கிய நோக்கம்,
(1) நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளின் வகைகளையும் அளவுகளையும் அதிகரித்தல் ஆகும்.
(2) நிறுவனத்தினால் செலுத்தப்படுகின்ற வரியினளவைக் குறைத்தல் ஆகும்.
(3) உரிமையாளர்களின் வணிகத்துடன் தொடர்புடைய பெறுமதியை (செல்வத்தினை) உச்சப்படுத்தல் ஆகும்.
(4) ஊழியர்களால் உழைக்கப்படும் வெகுமதிகளை உச்சப்படுத்தல் ஆகும்.
(5) வாடிக்கையாளர்களின் திருப்தியை உச்சப்படுத்தல் ஆகும். (………)

**24.** நிறுத்திவைக்கப்பட்ட வருமானங்கள் (Retained earnings) என்பதனாற் கருதப்படுவது,
(1) பங்குலாபம் வழங்கிய பின்னர் நிறுவனத்தில் எஞ்சிய திரண்ட வருமானங்களின் பெறுமதியாகும்.
(2) கம்பனியின் திரவத்தன்மை தொடர்பான ஓர் அடையாளமாகும்.
(3) வங்கியிலுள்ள பண நிலுவைக்குச் சமமான ஒன்றாகும்.
(4) நிறுவனம் வியாபாரத்தினால் உழைத்த இலாபமாகும்.
(5) வணிகத்தின் செலவுகளும் கிரயங்களும் கழிக்கப்பட்ட பின்னர் கம்பனியில் எஞ்சும் தேறிய இலாபமாகும். (………)

**25.** விண்ணப்பதாரிகளின் தகைமைகளையும் திறமைகளையும் அடையாளம் காண்பதற்காக நேர்காணலை நடாத்துவோரால் முறைப்படி தயாரித்துக் கொள்ளப்படுகின்ற வினாக்கள் அழைக்கப்படுவது,
(1) தொழில் விபரண வினாக்கொத்து என்றாகும்.
(2) தொழில் குறித்துரைத்தல் வினாக்கொத்து என்றாகும்.
(3) திறன் பரீட்சை வினாக்கொத்து என்றாகும்.
(4) கட்டமைப்பு வினாக்கொத்து என்றாகும்.
(5) தொழில் பகுப்பாய்வு வினாக்கொத்து என்றாகும். (………)

**26.** உள்ளக ஊழிய ஆட்சேர்ப்பின் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மை,
(1) புதிய வகையான அறிவினைக் கொண்ட நபர்களை ஆட்சேர்ப்பு செய்துகொள்ள முடிதல் ஆகும்.
(2) ஊழியர் மத்தியில் அநாவசியமானதொரு போட்டி உருவாகுதல் ஆகும்.
(3) அதிகளவான விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பு செய்துகொள்ள முடிதல் ஆகும்.
(4) ஊழியர்களின் ஈடுபாடு அதிகரித்தல் ஆகும்.
(5) ஆட்சேர்ப்புச் செலவு அதிகரித்தல் ஆகும். (………)

**27.** பின்வருவனவற்றுள் மட்டுப்படுத்தப்பட்ட பரப்பு வலையமைப்பு (LAN) என்பதனைச் சரியாக விளக்கும் விடையைத் தெரிவுசெய்க.
(1) வெவ்வேறு புவியியல் இடங்களில் உள்ள கணினிகளை இணைத்தல் ஆகும்.
(2) ஒரே கட்டடத்தில் உள்ள கணினிகளை ஒன்றுடன் ஒன்று இணைத்தல் ஆகும்.
(3) ஒரே அலுவலகத்தில் உள்ள அச்சு இயந்திரத்துடன் கணினியை இணைத்தல் ஆகும்.
(4) பல்வேறு நாடுகளிலுள்ள கணினிகளை இணையத்தின் மூலம் இணைத்தல் ஆகும்.
(5) மேற்குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் எதுவும் அல்ல. (………)

**28.** எழுத்து வடிவிலான உரையாடலுக்கு (Text chatting) அடிப்படையில் தேவைப்படுவது,
(1) வலைக் கமரா (Web Camera)
(2) விசைப்பலகை (Keyboard)
(3) சுட்டி (Mouse)
(4) நுணுக்குப்பண்ணி (Microphone)
(5) பளிச்சீட்டு நினைவகம் (USB Flash Drive) (………)

**29.** பின்வருவோருள் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட வணிகத் திட்டம் ஒன்றினைப் **பயன்படுத்தாத** தரப்பினர் யார் ?
(1) முயற்சியாளர்கள்
(2) முகாமையாளர்கள்
(3) முதலீட்டாளர்கள்
(4) வழங்குநர்கள்
(5) விளம்பர நிறுவனங்கள் (………)

[பக். 5 ஐப் பார்க்க

**30.** வணிகத் திட்டமிடல் ஒன்றிலுள்ள 'வணிக விபரத்தில்' **உள்ளடங்காத** முக்கிய விடயம் எது ?

(1) பணிப்பாளர் சபை தொடர்பான விபரம்
(2) வணிகத்தின் பெயரும் முகவரியும்
(3) நிறைவேற்றுச் சுருக்கம்
(4) நிறுவனக் கட்டமைப்பு
(5) வணிகத்தின் நோக்கங்கள்

(.........)

● **31** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் **பொருத்தமான சொற்களைக்** கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.

**31.** (அ) வணிகத்தின் வகைகள் மற்றும் வணிகத்தை வகைப்படுத்தும் நியதிகள் தொடர்பான அறிவைப் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| விபரம் | உரிமை | நோக்கங்கள் |
|---|---|---|
| 1. இரண்டு ஊழியர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும் தையல் நிலையம் | தனியார் | .............................. |
| 2. வார்த்தக வங்கி | .............................. | இலாபம் |
| 3. 50 கட்டில்களுடனான கூட்டுறவு வைத்தியசாலை | .............................. | .............................. |

(ஆ) ........................................ மற்றும் ........................................ ஆகியோரைக் காணக்கூடியதும் தொடர்புகளைப் பேணுவதுமான ஏதேனும் ஒரு வடிவம் சந்தை எனப்படும்.

**32.** (அ) போத்தலில் அடைக்கப்படும் பழச்சாறு உற்பத்தி நிறுவனம் ஒன்று தொடர்பான பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்பட்டுள்ளன.

போத்தல்களில் பழச்சாற்றை நிரப்புதல், பழங்கள், ஊழியர்களுக்குப் பயிற்சி வழங்கல், விளம்பரம் செய்தல், புதிய இயந்திரமொன்றில் முதலீடு செய்தல்.

மேலுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்டவணையிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

| உள்ளீடு | வணிகச் செயன்முறை | வெளியீடு |
|---|---|---|
| .................... | உற்பத்தி :-..............................<br>சந்தைப்படுத்தல் :-..............................<br>மனிதவளம் :-..............................<br>நிதி :- புதிய இயந்திரமொன்றில் முதலீடு செய்தல் | பழச்சாறு நிரப்பப்பட்ட போத்தல்கள் |

(ஆ) குறித்த வருடத்திற்கான, நாட்டின் மொத்த பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்தப் பெறுமதி ................................................ எனப்படும்.

**33.** (அ) இலங்கையின் சிறியளவிலான வணிகங்களை வலுவூட்டுவதற்கான சேவைகளை வழங்கும் நிறுவனங்களுள் I D B என்ற சுருக்கப் பெயரினால் குறிப்பிடப்படும் நிறுவனம் ................................................ ஆவதுடன், S L B D C என்ற சுருக்கப் பெயரினால் குறிப்பிடப்படுவது ................................................ ................................................ என்ற நிறுவனம் ஆகும்.

(ஆ) முயற்சியாண்மையின் சில தேர்ச்சிகளாக (Competencies) : 1. ........................................ 2. ........................................ 3. ........................................ 4. ........................................ ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

**34.** (அ) இலங்கையிலுள்ள விசேட நிதி நிறுவனங்கள் **இரண்டாக** ........................................ , ........................................ ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

(ஆ) தனது வாடிக்கையாளர்களின் பெறுமதிமிக்க பொருட்களையும் முக்கிய ஆவணங்களையும் பாதுகாப்பதற்காக வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்படும் சேவை ........................................ எனப்படும்.

[பக். 6 ஐப் பார்க்க

**35.** (அ) .............................................. மற்றும் .............................................. என்பன பயனுறுதிமிக்க செய்தி ஒன்றினைத் தயாரிக்கும்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய **இரண்டு** காரணிகள் ஆகும்.

(ஆ) நிறுவனமொன்றின் மாதாந்த மீளாய்வுக் கூட்டம் ஒன்றில் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி (CEO) ஏனைய முகாமையாளர்களுக்கு உரையாற்றுதல் .............................................................. என்பதுடன் அது .............................................. தொடர்பாடல் முறை ஆகும்.

**36.** (அ) வணிகக் கொடுக்கல் வாங்கல்களில் இலத்திரனியல் வர்த்தகம் இடம்பெறக்கூடிய **இரு** முறைகளாக .............................................................. , .............................................................. என்பவற்றைக் குறிப்பிடலாம்.

(ஆ) முதல்வர் ஒருவரின் அதிகாரத்தின் கீழ் ஏதாவது செயற்பாடொன்றில் ஈடுபடுபவர் .................................... என அழைக்கப்படுவார்.

**37.** (அ) முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின் **இரு** பிரிவுகளாக .............................................................. , .............................................................. என்பவற்றைக் குறிப்பிடலாம்.

(ஆ) பொருளொன்று விலையிடப்படுவதன் **இரண்டு** நோக்கங்கள் .............................................................. , .............................................................. என்பன ஆகும்.

**38.** (அ) .............................................. மற்றும் .............................................. என்பன தொடர்பாடல் சந்தைப்படுத்தலை (Relationship marketing) முழுமைப்படுத்துவதற்கு அவசியம் நிறைவேற்றப்பட வேண்டிய **இரண்டு** பண்புகளாகும்.

(ஆ) இடைநடுவர்கள் இன்றி பொருட்களை விநியோகித்தல் .............................................................. எனப்படும்.

**39.** (அ) .............................................. மற்றும் .............................................. என்பன நவீன பரிமாற்றல் செயன்முறைக்குத் துணைபுரியும் பல்வேறு சேவைகளுள் **இரு** சேவைகள் ஆகும்.

(ஆ) இலங்கையிலுள்ள வணிகங்கள் தமது வியாபாரச் சின்னங்களை .............................................................. திணைக்களத்தில் .............................................................. சட்டத்தின் கீழ் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

**40.** (அ) USB பளிச்சீட்டு வட்டின் இரு நன்மைகள் .............................................................. , .............................................................. என்பன ஆகும்.

(ஆ) மத்திய மட்ட முகாமையாளர்களுக்கு திட்டமிடல் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளுக்குத் தேவையான தகவல்களை வழங்கும் முறைமை .............................................................. என அழைக்கப்படும்.

● **41** தொடக்கம் **50** வரையிலுள்ள வினாக்களுக்கு **மிகப் பொருத்தமான** விடைகளை எழுதுக.

**41.** வணிகச் சூழலை விளங்கிக் கொள்ளல் திட்டமிடலுக்கு மிகவும் முக்கியமானதாகும். பின்வரும் கூற்றுகளுக்கு எதிரேயுள்ள இடைவெளிகளை, SWOT மாதிரியில் காணக்கூடிய பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புகள், சவால்கள் ஆகியவற்றுள் பொருத்தமானதைப் பயன்படுத்தி நிரப்புக.

1. வணிக நடவடிக்கைகளுக்காக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் திறந்துவிடப்பட்டமை : ........................
2. உமது வணிகம் அமைந்துள்ள பிரதேசத்தில் புதிய வணிக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அதிகளவான நிறுவனங்கள் திட்டமிடுகின்றமை : ........................
3. புதிய சந்தைகளுக்காக வணிக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்குத் தேவையான திறன்களைக் கொண்ட ஊழியர்கள் நிறுவனத்துள் காணப்படாமை : ........................
4. உறுதியாகத் தாபிக்கப்பட்டுள்ள கம்பனியின் வியாபாரச் சின்னம் : ........................

[பக். 7 ஐப் பார்க்க

**42.** நுகர்வோரின் உரிமைகள் **நான்கினை** எழுதுக.

1. ......................................................................................................

2. ......................................................................................................

3. ......................................................................................................

4. ......................................................................................................

**43.** ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகள் **நான்கினை** எழுதுக.

1. ......................................................................................................

2. ......................................................................................................

3. ......................................................................................................

4. ......................................................................................................


**44.** (அ) பெறுமதியினை வழங்கும் ஏதேனும் ஒன்றைச் செய்வதற்கு ஆபத்துகளை எதிர்கொள்ளத் தயாராக இருக்கும் நபர் ...................................................... என அழைக்கப்படுவதுடன், தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற வணிகமொன்றில் பணியாற்றிக்கொண்டு புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகம் செய்து மாற்றங்களை ஏற்படுத்தும் நபர் ...................................................... என அழைக்கப்படுவார்.

(ஆ) ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் சிறு வணிகங்களுக்கு வழங்கப்படும் வலுவூட்டல்களாக ........................................................ மற்றும் ...................................................... என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**45.** ஹென்றி மின்ஸ்பர்க் (Hentry Mintzberg) இனால் முன்வைக்கப்பட்ட ஆளிடைத் தொடர்பு வகிபாகத்திற்குரிய உப வகிபாகங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

1. ...................................................... 2. ......................................................

**46.** வணிகமொன்றின் நிதி திரட்டும் வழிமுறைகள் தொடர்பாக காட்டப்பட்டுள்ள பின்வரும் வரைபடத்தைப் பூர்த்தி செய்க.




**47.** (அ) முயற்சியாளர் ஒருவர் தனது பொருட்களை அல்லது சேவைகளை விற்பனை செய்ய எதிர்பார்க்கும் நுகர்வோர் குழு ...................................................... எனப்படும்.

(ஆ) பொழுதுபோக்காகச் செய்யப்படுகின்ற நடவடிக்கைகள் வணிகமொன்றாக மாற்றமடைவதற்கான ஓர் உதாரணம் ...................................................................................... ஆகும்.

**48.** பின்வரும் இடைவெளிகளை பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

1. மொத்த விற்பனை வருமானம் (–) .................................... = மொத்த இலாபம்
2. மொத்த இலாபம் (+) ஏனைய வருமானங்கள் (–) .................................... = செயற்பாட்டுச் செலவுகள்
3. .................................... (–) பொறுப்புக்கள் = உரிமை மூலதனம்
4. தேறிய வருமானம் (÷) உரிமை மூலதனம் = ....................................

**49.** காப்புறுதி வணிகத்தின் பயனுறுதித் தன்மைக்கு காப்புறுதிக் கொள்கைகள் முக்கியமானவை ஆகும். அவ்வாறான காப்புறுதிக் கொள்கைகள் **நான்கினை** எழுதுக.

1. .................................................... 2. ....................................................

3. .................................................... 4. ....................................................

**50.** (அ) ஊழியர் வேலைநிறுத்த வகைகள் **இரண்டினைப்** பெயரிடுக.

1. .................................................... 2. ....................................................

(ஆ) நிறுவனத்தின் மிக எளிமையான சட்டத்திட்டங்களையும் பின்பற்றி மிகக் குறைந்தளவு வேலையினைச் செய்தல் .................................... எனப்படுவதுடன் இதனால் நிறுவனத்தின் .................................... அதிகரிக்கும்.

***

14696

AL/2014/32/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

ව්‍යාපාර අධ්‍යයනය II
வணிகக் கல்வி II
Business Studies II

32 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள்:**

※ ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

**1.** (i) வணிகமானது சமூகத்தில் பல முக்கிய வகிபாகங்களைக் கொண்டுள்ளது.

(அ) கைத்தொழிற் புரட்சியின் விளைவாக வணிகத்துறையில் ஏற்பட்ட பிரதான மாற்றங்களைச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) வணிகத்தினால் பூர்த்திசெய்யப்படுகின்ற பல்வேறுபட்ட தேவைகள் யாவை ? (04 புள்ளிகள்)

(ii) இலங்கையின் பண்டைய பொருளாதாரச் செயன்முறையில் விவசாயம் அடிப்படையானதாக காணப்பட்ட போதிலும், நிகழ்காலத்தில் விவசாயத்துக்கு மேலதிகமாக பல்வேறு துறைகளை நோக்கி நகர்ந்துள்ளதைக் காணமுடிகிறது.

(அ) தற்பொழுது காணப்படும் இத்தகைய போக்கிற்கான **நான்கு** காரணங்களைக் குறிப்பிடுக.

(ஆ) 'வர்த்தகம்' மற்றும் 'வணிகம்' என்பவற்றுக்கு இடையே காணப்படும் தொடர்பினைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) பின்வரும் எண்ணக்கருச் சோடிகளுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க.

(அ) சந்தை இடமும் சந்தை இடைவெளியும் (market place and market space)

(ஆ) நீண்டகால உபயோகப் பொருள்களும் வசதிப் பொருள்களும் (04 புள்ளிகள்)

(iv) துரித-உணவு வணிகமானது (Fast-Food business) இலங்கையின் நகர்ப்புறங்களில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது.

(அ) துரித-உணவுத் தொழிற்துறையின் துரித வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் பேரினச் சூழல் காரணிகள் யாவை ?

(ஆ) துரித-உணவு வணிகத்தில் வாடிக்கையாளர்களை ஈர்த்து தக்கவைத்துக்கொள்வதற்கு உதவும் உள்ளகச் சூழல் காரணிகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(v) (அ) வணிகத்துறையின் சில துறைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்தினைத் தொடர்ந்து இடம்பெறும் வணிக நடவடிக்கைகள் மூலம் சமூகத்தின் மீதும் வணிகத்தின் மீதும் அக்கறை கொண்டுள்ள தரப்பினருக்கு பாதகமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியவாறு விரிவாக்கமடைந்துள்ள துறைகள் எவையெனச் சுருக்கமாக விவரிக்குக.

(ஆ) வணிக விழுமியங்களைப் பின்பற்றுவது நிறுவனமொன்றிற்கு ஏன் முக்கியமானதென விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**2.** (i) (அ) சுதந்திர வர்த்தக வலயங்களிலுள்ள முதலீட்டாளர்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் வசதிகள் யாவை ?

(ஆ) இலங்கை அரசாங்கத்தினால் பணக் கொள்கைகளை அமுல்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் **நான்கு** கருவிகளைச் சுருக்கமாக விவரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) நிகழ்கால சமூகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் பெரியளவு முக்கியத்துவம் பெற்றுக் காணப்படாமைக்கான காரணங்கள் எவையென விவரிக்குக.

(ஆ) பங்குடைமை வணிகத்தில் பங்காளர்களின் உரிமைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) வெளிநாட்டில் பணியாற்றிய 'கமலன்' ஒரு மில்லியன் ரூபா சேமிப்புடன் இலங்கைக்குத் திரும்பினார். இப்பொழுது அவர் அப்பணத்தைப் பயன்படுத்தி சொந்த வணிகமொன்றை ஆரம்பிக்கும் எதிர்பார்ப்பில் உள்ளார். எனினும் அவருடைய சில நண்பர்கள் அவரை பங்குடைமை வியாபாரம் ஒன்றினை ஆரம்பிக்கும்படி அறிவுரை வழங்குகின்றனர். அவருக்கு இவ் இரு தெரிவுகளிலும் காணப்படக்கூடிய சாதக பாதக விடயங்களை எடுத்துக்காட்டி, கமலன் எடுக்க வேண்டிய மிகப் பொருத்தமான முடிவு எது என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) அரசாங்கம் வணிகங்களின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய **நான்கு** வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(ஆ) கம்பனி ஒன்றை கூட்டிணைக்கும்போது கம்பனிப் பதிவாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் யாவை ? (04 புள்ளிகள்)

(v) (அ) கரைகடந்த கம்பனிகளுக்கும் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கும் இடையிலான **இரண்டு** ஒற்றுமைகளையும் **இரண்டு** வேற்றுமைகளையும் குறிப்பிடுக.

(ஆ) நுகர்வோரைப் பாதுகாப்பதற்கென இலங்கை நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரச் சபைக்குக் காணப்படும் **இரண்டு** அதிகாரங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

**3.** (i) (அ) சிறிய வணிகமொன்றை ஆரம்பிக்கும்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் யாவை ?

(ஆ) பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

வெற்றிகரமான முயற்சியாளனாக வரவேண்டும் என்பது சிந்துஜனின் கனவாக இருந்ததுடன் அவர் தனது 20ஆவது வயதில் ரூ. 50 000 ஐ முதலிட்டு ஐஸ்கிறீம் வணிகத்தை ஆரம்பித்தார். அவர் தற்போது தனது வணிகம் தொடர்பாகத் தேவைப்படுகின்ற திறன்களையும் அனுபவத்தினையும் பெற்றுக் கொண்டிருப்பதுடன் சந்தையில் 5% பங்கினையும் கைப்பற்றியிருக்கிறார். அவர் வணிகத்தில் மேற்கொண்ட புதுமைப் புகுத்தல்களும், குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்களுடன் இணைந்து உருவாக்கிக் கொண்டிருக்கும் தனிப்பட்ட வலைப்பின்னலும் அவரை வணிகத்தில் இந்தளவானதொரு வெற்றிக்கு இட்டுச் சென்றுள்ளது எனக் கருதுகிறார். தற்போது அவர் தனது வியாபாரத்தை மேலும் விரிவுப்படுத்தலாமா என எண்ணுகிறார்.

(1) தனது வணிகத்தை மேலும் வெற்றியடையச் செய்வதற்கு சிந்துஜனுக்குத் தேவைப்படுகின்ற முயற்சியாண்மைத் தேர்ச்சிகள் எவை ?

(2) தனது வணிகத்தினை மேலும் வெற்றியடையச் செய்வதற்கு சிந்துஜனால் முன்னெடுக்கப்படக்கூடிய அடுத்த உபாயமாக நீங்கள் எதனை ஆலோசிக்கிறீர்கள் ? (04 புள்ளிகள்)

(ii) (அ) வங்கிப் பணத்திற்கும் இலத்திரனியல் பணத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.

(ஆ) நிதித் தேவை தொடர்பான சேவைகளை நிறைவேற்றுவதற்காக அரச மற்றும் தனியார் வங்கிகள் காணப்படுகின்ற போதிலும் வேறு நிதி நிறுவனங்களாலும் பரந்துபட்ட அளவில் அச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

1. இலங்கையில் செயற்படும் பல்வேறு நிதி நிறுவன வகைகள் யாவை ?
2. உரிமம் பெற்ற விசேட வங்கிகளுக்கு அனுமதி **வழங்கப்படாத** வணிக நடவடிக்கைகள் யாவை ?

(04 புள்ளிகள்)

(iii) (அ) குத்தகைக் கம்பனிகளிடமிருந்து வணிகங்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் யாவை ?

(ஆ) முயற்சியாளர்களுக்கு முயற்சியாண்மை மூலதனக் கம்பனியினால் (venture capital company) வழங்கப்படும் சேவைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) (அ) சில நபர்கள் கடன் அட்டை(credit card)களைப் பயன்படுத்துவதில் தயக்கம் காட்டுவது ஏன் என விளக்குக.

(ஆ) வணிக வங்கியொன்றில் நடைமுறைக் கணக்கினைப் பேணிச் செல்லும் வணிகர் ஒருவருக்கு மேலதிகப் பற்று வசதியைத் தவிர பெற்றுக்கொள்ளக்கூடிய ஏனைய வசதிகள் எவை ? (04 புள்ளிகள்)

(v) (அ) இலங்கை மத்திய வங்கியின் பிரதான குறிக்கோள்களைக் குறிப்பிடுக.

(ஆ) வணிக வங்கிகள் தமது நோக்கங்களை அடைந்துகொள்வதற்குப் பல செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன.

1. வணிக வங்கிகள் தமது இலக்குகளை அடைந்துகொள்வதற்கு மேற்கொள்ளும் முக்கிய நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
2. வணிக அபிவிருத்திக்கு நிதி நிறுவனங்கள் எவ்வகையில் பங்களிப்பை வழங்குகின்றன என்பதனைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**4.** (i) சங்கீதன் என்பவரின் கார் விபத்துக்குள்ளாகியதில் அவருக்கு ரூ. 1 200 000 நட்டம் ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டது. அவர் ரூ. 2 000 000 பெறுமதியான இக்காரைக் காப்புறுதியாளர்களான 'SRC' இடமும் 'JSA' இடமும் முறையே ரூ. 1 800 000 இற்கும் ரூ. 1 200 000 இற்கும் காப்புறுதி செய்துள்ளார்.

(அ) இரு காப்புறுதி நிறுவனங்களிடமிருந்தும் வாகனத்தின் முழுமையான இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ள முடியுமா ? உமது விடைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

(ஆ) ஒப்புறுதி (underwriting), மீள்காப்புறுதி. (re-insurance) எனும் பதங்களினால் அறியப்படுவது என்ன ? (04 புள்ளிகள்)

(ii) மரக்கறி வகைகளையும் பழங்களையும் ஏற்றிச் செல்வதில் புகைவண்டி மற்றும் நெடுஞ்சாலை போக்குவரத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை தீமைகளை ஒப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் தலைமை இயந்திரவியலாளர் அவரின் கீழ் பணியாற்றும் இயந்திரவியலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, இயந்திரப் பழுதுகளைக் குறைப்பது தொடர்பான அறிவுரைகளை வழங்கினார். இருப்பினும் இரு வாரங்களுக்குப் பின்னர், செய்யப்பட்ட அவதானிப்புகளின்போது பழுதடையும் இயந்திரங்களின் எண்ணிக்கை இன்னும் குறையாதிருப்பதனையும் அதற்கான காரணம் அநேகமான இயந்திரவியலாளர்கள் தான் வழங்கிய அறிவுரைகளை விளங்கிக் கொண்டிருக்கவில்லை என்பனையும் விளங்கிக் கொண்டார்.

(அ) தலைமை இயந்திரவியலாளரின் அறிவுரைகளை ஏனைய இயந்திரவியலாளர்கள் விளங்கிக் **கொள்ளாமைக்கு** ஏதுவாகி இருக்கக் கூடிய காரணிகள் யாவை ?

(ஆ) "வாய்மொழி மூலத் தொடர்பாடலானது எழுத்து மூலமான தொடர்பாடலை விட விளைத்திறனானது ஆகும்." இதனை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா ? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(04 புள்ளிகள்)

(iv) நீர் உமது பாடசாலை விவாதக் குழுவின் ஓர் அங்கத்தவர் எனவும், அடுத்த வாரம் 'நாடொன்று பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும்' எனும் தலைப்பில் இடம்பெறவுள்ள விவாதம் ஒன்றில் உமது குழு பங்குபற்றவுள்ளதாகவும் கருதிக் கொள்க.

(அ) மேற்படி தலைப்பிற்குச் சார்பான **நான்கு** விடயங்களை எழுதுக.

(ஆ) மேற்படி தலைப்பிற்கு எதிரான **நான்கு** விடயங்களை எழுதுக. (04 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

(v) (அ) இலங்கையின் நகர்ப்புறங்களில் சிறப்பு அங்காடிகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. சிறப்பு அங்காடிகளினால் வாடிக்கையாளருக்குக் கிடைக்கும் **நான்கு** நன்மைகளை எழுதுக.
(ஆ) வாடிக்கையாளர்கள் வணிக நடவடிக்கைகளில் இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்துவதில் இன்னமும் தயக்கம் காட்டுகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. இத்தயக்கத்திற்கான காரணங்கள் **நான்கினை** எழுதுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)


## பகுதி II

**5.** (i) (அ) நிறுவனம் ஒன்றின் வினைத்திறனையும் பயனுறுதித்தன்மையினையும் அளவிடுவதற்குப் பயன்படுத்தக்கூடிய நியதிகள் யாவை ?
(ஆ) நடைமுறையில் முகாமைத்துவம் முன்னரை விட முக்கியத்துவமுடைய ஒன்றாக மாறியுள்ளமைக்கான **நான்கு** காரணங்களைத் தருக. (04 புள்ளிகள்)

(ii) வணிகச் சூழலிலுள்ள நிச்சயமற்ற தன்மை காரணமாக வணிகரொருவரால் மேற்கொள்ளப்படும் திட்டமிடுதல் என்பது பணத்தையும் நேரத்தையும் வீண்விரயமாக்குதலாகும் என நம்பப்படுகிறது.
(அ) அவ் வணிகருக்குத் திட்டமிடலின் முக்கியத்துவத்தினை விளக்குவதற்காகத் திட்டமிடலிலுள்ள நன்மைகளை விளக்குக.
(ஆ) தீர்மானமெடுத்தல் செயன்முறையில் சிறந்த மாற்றீட்டினைத் தெரிவுசெய்வதில் கையாளத்தக்க நியதிகள் யாவை ? (04 புள்ளிகள்)

(iii) பின்வருவன கம்பனி A, கம்பனி B ஆகியவற்றின் ஒழுங்கமைப்பு வரைபடங்களாகும்.

A B




ஒழுங்கமைப்புக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்குறிப்பிடப்பட்டுள்ள A, B கம்பனிகளின் ஒழுங்கமைப்பு வரைபடங்கள் இரண்டினதும் ஒற்றுமை, வேற்றுமைகளை விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) முதன்நிலை முகாமையாளர்களுக்கு மிக முக்கியமான முகாமைத் திறன் எது ? காரணங்களைக் குறிப்பிடுக.
(ஆ) நிறுவனங்கள் தமது ஊழியர்களை ஊக்குவிக்கும் நோக்கில் மில்லியன் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்கின்றன. ஊக்குவிக்கப்பட்ட ஊழியர்கள் மூலம் முகாமைத்துவத்துக்குக் கிடைக்கும் நன்மைகள் யாவை ? (04 புள்ளிகள்)

(v) "ஊழியர்சார் முகாமைத்துவ சாயல் கொண்ட தலைவர்கள் ஊழியர்களை மகிழ்வுடன் வைத்துக் கொள்வதுடன் அவர்கள் ஊடாகத் தம் பணிகளையும் நிறைவேற்றிக் கொள்வர்."
(அ) ஊழியர்சார் முகாமைத்துவ சாயல் கொண்ட தலைமைத்துவம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.
(ஆ) வினைதிறனான தலைவர் ஒருவரின் **நான்கு** பண்புகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**6.** (i) (அ) பாதுகாப்பு இருப்பு (Buffer stock) என்பதனால் கருதப்படுவது என்ன ?
(ஆ) JIT முறையைச் செயற்படுத்தும்போது இலங்கையின் உற்பத்தி நிறுவனங்கள் எதிர்கொள்ளும் தடைகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) 'பரிமாற்றல் தொடர்பு' (Exchange Relationship) எனும் எண்ணக்கருவினால் 'சந்தை' எனும் எண்ணக்கரு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.
(அ) பரிமாற்றல் தொடர்பினைக் கட்டியெழுப்புவதற்கு நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடுகள் யாவை ?
(ஆ) பல்வேறுபட்ட வாடிக்கையாளர்கள் யாவர் என்பதனை உதாரணங்களுடன் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iii) பின்வரும் எண்ணக்கருச் சோடிகளுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக.
(அ) குடும்பச் சின்னமும் தனிப்பட்ட சின்னமும்
(ஆ) முகாமைத்துவ தகவல் முறைமையும் சந்தைப்படுத்தல் தகவல் முறைமையும் (04 புள்ளிகள்)

(iv) வணிக நிறுவனமொன்றுடன் தொடர்புடைய தகவல்கள் பின்வருமாறாகும்:

- மொத்த ஊழியப் படையினரின் எண்ணிக்கை 100
- வாரமொன்றுக்கான மொத்த ஊழியக் கிரயம் (ரூ.) 4 000
- வாரமொன்றுக்கான மொத்த வெளியீடுகள் (அலகுகள்) 50 000

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.
(அ) அலகொன்றுக்கான ஊழியக் கிரயம்
(ஆ) ஊழிய விளைதிறன் (04 புள்ளிகள்)

(v) மேம்படுத்தல் கலவையில் உள்ளடங்கும் உப பிரிவுகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

**7.** (i) கடன் அட்டைகளைப் பயன்படுத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்குக் கழிவுகளை வழங்குவதாக சிறப்பு அங்காடி ஒன்றினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ) கடன் அட்டை(crdit card)களைப் பயன்படுத்துவதிலுள்ள அனுகூலங்களையும் வரையறைகளையும் விளக்குக.

(ஆ) இலங்கையில் பயன்படுத்தப்படும் கடன் அட்டைகளுக்கு **இரண்டு** உதாரணங்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(ii) கொழும்புப் பங்கு பரிவர்த்தனையில் பிணைப்பத்திரங்கள் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் **இரு** முறைகளையும் பெயரிட்டு, அதில் ஒரு முறையினை விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) கைத்தொழில் பிணக்குகள் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் அடிப்படைக் காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ஆ) தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றினைத் தீர்ப்பதற்காக இலங்கையின் வணிக நிறுவனங்களினால் பின்பற்றப்படக்கூடிய வெவ்வேறு முறைகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) மனித வளங்களைத் திட்டமிடுவதனால் நிறுவனம் ஒன்றுக்குக் கிடைக்கக்கூடிய **நான்கு** நன்மைகளைக் குறிப்பிடுக.

(ஆ) செயலாற்றுகை மதிப்பீட்டின் மூலம் ஊழியர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் எவை ? (04 புள்ளிகள்)

(v) ஆய்வாளர்களின் கருத்தின்படி ஆடைக் கைத்தொழில் எதிர்நோக்கும் ஒரு முக்கிய பிரச்சினை உயர்வான ஊழியப் புரள்வாகும். இப்பிரச்சினைக்கு முன்வைக்கக்கூடிய **நான்கு** தீர்வுகளை ஆலோசிக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**8.** (i) (அ) தரவுகளை ஒழுங்கமைத்தலின் (data processing) பிரதான பணிகளை விவரிக்குக.

(ஆ) வணிக மேம்படுத்தலுக்குச் சமூக வலையமைப்பினை (Social Network) பயன்படுத்தக்கூடிய விதத்தினைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) தகவல், தொடர்பாடல் தொழினுட்பத்தின் விருத்தி வணிக நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தினை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) சமப்பாட்டுப்புள்ளி (break even point) என்பதனால் கருதப்படுவது என்ன ?

(ஆ) 'லக்சீபன்' எனும் முயற்சியாளர் தனது உற்பத்தி தொடர்பாகப் பின்வரும் தகவல்களை முன்வைத்துள்ளார்.

- உற்பத்தி செய்யப்பட்ட மொத்தப் பொருட்களின் அளவு (அலகுகள்) 10 000
- மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனைப் பெறுமதி ரூ. 1 000 000
- மாறும் செலவுகள் ரூ. 600 000
- நிலையான செலவுகள் ரூ. 200 000

மேலே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1. இலாபம்
2. பங்களிப்பு
3. சமப்பாட்டுப்புள்ளி

(04 புள்ளிகள்)

(iv) இலங்கையின் சமூகப் பொருளாதார மாற்றத்திற்குச் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களின் (SME) முக்கியத்துவத்தினை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி வணிகத் திட்டமிடல் ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய இரண்டு பகுதிகளான நிறைவேற்றுச் சுருக்கத்தினையும் செயற்பாட்டுத் திட்டத்தினையும் விளக்குக.

| வணிகத்திட்டமிடலின் பகுதிகள் | விவரணம் | உள்ளடங்கியுள்ள ஒரு விடயம் |
|---|---|---|
| 1. நிறைவேற்றுச் சுருக்கம் | | |
| 2. செயற்பாட்டுத் திட்டம் | | |

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

* * *